**செய்தி வெளியீடு** **நாள்: 02.09.2025**

**திருவள்ளூர் மாவட்டம், குத்தம்பாக்கத்தில் சிஎம்டிஏ சார்பில் கட்டப்பட்டு வரும் புதிய புறநகர் பேருந்து முனையத்தின் பணிகளை துரிதப்படுத்தும் வகையில் மாண்புமிகு அமைச்சர்கள் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள் மற்றும் திரு.சா.மு.நாசர் அவர்கள் ஆகியோர் நேரில் ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்து, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்காக பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினர்.**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொற்கரங்களால் குத்தம்பாக்கம் புதிய புறநகர் பேருந்து முனையம் 2025 நவம்பர் மாதம் இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு அற்பணிக்கப்படும்.**

**மாண்புமிகு அமைச்சர் திரு. பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்.**

*********

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (02.09.2025) திருவள்ளூர் மாவட்டம், குத்தம்பாக்கத்தில் கட்டப்பட்டு வரும் புதிய புறநகர் பேருந்து முனையத்தின் முன்னேற்றப் பணிகளை மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** மற்றும் மாண்புமிகு சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் **திரு.சா.மு.நாசர் அவர்கள்** ஆகியோர் நேரில் ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்து, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்காக பொறியாளர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினர்.

**மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது** :

பெருகி வருகின்ற மக்கள் பயன்பாட்டிற்கு ஏற்றார் போல் பேருந்துகளின் அளவையும் பணியாளர்களையும் திராவிட மாடல் ஆட்சி ஏற்பட்ட பிறகு அனைத்து வகையிலேயேயும் சராசரி வறுமைகோட்டிற்கு கீழே இருக்கின்ற மக்களும், நடுத்தர மக்களும் அன்றாட பணிகளினால் அவர்களுடைய வாழ்வாதாரத்தை கடந்து செல்கின்ற மக்களும் பயன்படுகின்ற வகையில் பல்வேறு திட்டங்களை **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** ஆட்சி பொறுப்பேற்ற பிறகு கொண்டுவந்து இருக்கின்றார். அதில் ஒரு பகுதியாக கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையம் தற்போது பயன்பாட்டிற்கு வந்திருக்கின்றது.

அதை தொடர்ந்து குத்தம்பாக்கம் புதிய புறநகர் பேருந்து முனையம் தினசரி MTC - 300 பேருந்துகளும், அதேபோல் SETC - 600 பேருந்துகளும், KSRTC - 50 பேருந்துகளும், அதேபோல் அண்டை மாநிலத்திற்கு செல்லுகின்ற வழித்தடங்களில் APSRTC - 36 பேருந்துகளும், இயக்குவதற்கு முடிவெடுக்கப்பட்டு இருக்கின்றது. இந்த பேருந்துகளில் வார நாட்களில் சுமார் 30 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் பயணிப்பார்கள் என்று கணக்கிடப்பட்டுள்ளது. விடுமுறை நாட்களில் அந்த எண்ணிக்கை கூடுதலாகி 40 ஆயிரத்திலிருந்து ஐம்பதாயிரம் மக்கள் பயணிப்பாளர்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. விழா காலங்களில் விடுமுறை தொடர்ந்து வருகின்ற விழா நாட்களில் ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் பயணிப்பார் என்று கணக்கிடப்பட்டிருக்கின்றது.

Verified @ RealEstate™

ஆம்பூர், வேலூர், தர்மபுரி போன்ற மாவட்டங்களுக்கு பயணிக்கின்ற மக்களுக்கு குத்தம்பாக்கம் புதிய புறநகர் பேருந்து முனையத்திற்கு கனெக்டிவிட்டியாக மீஞ்சூர், திருவொற்றியூர், மாதாவரம், சைதாப்பேட்டை, திருவான்மியூர் போன்ற பகுதிகளில் இருந்தும் இந்த பகுதி அமைந்திருக்கின்ற சுற்றுவட்டார பகுதியில் இருந்தும் இதற்கு இணைப்பு பேருந்துகளையும் ஏற்பாடு செய்திருக்கின்றோம். இந்தப் பேருந்து முனையத்தை பொருத்தவரை சென்னை சுற்றியுள்ள மக்களுக்கு போக்குவரத்துக்கு மிகப்பெரிய வரப்பிரசாதமாக அமையும்.

இந்த குத்தம்பாக்கம் புதிய புறநகர் பேருந்து முனையத்தை பயன்படுத்துகின்ற அந்த மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்கு **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள்** உத்தரவின் பேரில் இந்த மாவட்டத்துடைய அமைச்சர் அன்பிற்கினிய அண்ணன் மாண்புமிகு திரு.நாசர் அவர்களும் இந்த தொகுதியினுடைய சட்டப்பேரவை உறுப்பினர் அன்பிற்கினிய திரு.கிருஷ்ணசாமி அவர்களும், எங்கள் துறையினுடைய செயலாளர் அன்பிற்கினிய திருமதி.காகர்லா உஷா அவர்களும், துறையினுடைய உறுப்பினர் செயலாளர் அன்பிற்கினிய திரு.பிரகாஷ் அவர்களும் சிஇஓ திரு.சிவஞானம் அவர்களும், இந்த மாவட்டத்தின் ஆட்சித்தலைவர் திரு.பிரதாப் அவர்களும், போக்குவரத்துத்துறை, மின்சாரத்துறை, நெடுஞ்சாலைத்துறை, காவல்துறை போன்ற அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து இன்றைக்கு ஆய்வு பணிகளை மேற்கொண்டு இருக்கின்றோம்.

வருகின்ற மக்களுக்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளையும் கண்டிப்பாக இந்த பேருந்து முனையம் துவக்கப்பட்ட நாளிலிருந்து பயணிக்கின்ற மக்கள் அனைவருக்கும் அனைத்து வசதிகளும் கிடைக்கின்ற அளவிற்கு திட்டமிட்டு இருக்கின்றோம். இந்த குத்தம்பாக்கம் புதிய புறநகர் பேருந்து முனையமானது 2025 நவம்பர் மாதம் இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடைய** பொற்கரங்களால் அர்ப்பணிக்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறோம். **இவ்வாறு மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தெரிவித்தார்.**

இந்த ஆய்வின்போது வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் திரு.ஆ.கிருஷ்ணசாமி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர்/முதன்மைச் செயலாளர் திரு.கோ.பிரகாஷ், இ.ஆ.ப., முதன்மை செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., திருவள்ளூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மு.பிரதாப், இ.ஆ.ப., ஆவடி காவல் துணை ஆணையாளர் (போக்குவரத்து) திரு.சி.சங்கு, எம்டிசி இணை மேலாண் இயக்குநர் திரு.ராகவன், தலைமை பொறியாளர் திரு.மகாவிஷ்ணு, தேசிய நெடுஞ்சாலைத்துறை திட்ட இயக்குநர் (NHAI) திருமதி. சாவித்திரி தேவி, குத்தம்பாக்கம் பேருந்து முனைய தலைமை நிர்வாக அலுவலர் டாக்டர் பிரின்ஸிலி ராஜ்குமார், கண்காணிப்பு பொறியாளர் திரு.ராஜன்பாபு, எம்டிசி பொது மேலாளர் (இயக்கம்) திரு.நெடுஞ்செழியன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துக்கொண்டனர்.

Verified RealEstate™